1972 ஆகஸ்ட் 9]

சிறைக் கைதிகளுக்கு அஞ்சல் அட்டைகள்

**11 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—*

கைதிகளாக மத்திய சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கு மாதம் எத்தனை அஞ்சல் அட்டைகள் வழங்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த நடைமுறைக் கையேடு 2-ம் பகுதியில் உள்ள விதி எண் 426 பீ-ன் படி "சி" பிரிவு கைதிகள் எல்லோரும் வாரத்திற்கு ஒரு கடிதம் எழுதலாம். வரப்பெறலாம். கடிதம் எழுத விரும்பும் கைதிகளுக்கு, செலவைச் சுருக்க வேண்டி அரசு முத்திரையிட்ட அஞ்சல் அட்டைகள் வழங்கப்படுகின்றன. "ஏ" & "பி" பிரிவு கைதிகளுக்கும் இது பொருந்தும்.

நன்னிலத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு

**12 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம் நன்னிலத்தில் புதிதாக சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டு ஒன்றினைத் துவக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

மருத்துவர்களுக்கு நிதி உதவித் திட்டம்

**13 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டில் நர்சிங் ஹோம், சோதனைச் சாலை, ஆஸ்பத்திரி போன்றவைகளைக் கட்டுவதற்குக் கடன் தரும்படி தமிழ்நாடு தொழில் முதலீடு கார்ப்பரேஷனை அரசு கேட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (கால்நடை மருத்துவர்கள் உட்பட) மருத்துவர்கள் கிராமப்பகுதிகளில் மருத்துவத் தொழில் நடத்தவும், வேலையில்லாத மருத்துவர்கள் கிராமப் பகுதிகளில் ஆதாயம் தரத்தக்க வேலையைத் தாமே மேற்கொள்ள அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்கும் "கிராம மருத்துவர்களுக்கு நிதியுதவி" அளிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அண்மையில் கொண்டு வந்துள்ளது. தனி மருந்தகங்கள், தனி மருந்தக ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றை அமைக்கவும் சாதனங்கள் வாங்கவும் தனி மருத்துவ மனைக்கான கட்டிடங்கள் கட்டுதல் முதலியவற்றிற்கும் மருத்துவர்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிதியுதவி அளிக்கும்.